# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,935—1970 දෙසැම්බර් 4 වැනි සිකුරාදා—1970.12.4

14,935 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விளக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 689 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 690 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 692 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 696 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாநுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 693 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 392

என். டிஜி 250/ஆர்ஈசிரி/1

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றங்கள்

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர்கள் 1970, யூன் 19 ஆம் திகதியிலிருந்து லெவ்ரினன்ற்ஸ் ஆகக் கடவர் :—

செக்கன்ட் லெவ்ரினன்ற் தெவிந்த கலுபகன, சி. ஏ. எஸ். சி.

செக்கன்ட் லெவ்ரினன்ற் உடென அமிதோதன குணவர்த்தன, சி. எல். ஐ.

செக்கன்ட் லெவ்ரினன்ற் குக்குலகே ஜனக்க சந்திரஜித் பெரேரா, சி. ஈ.

செக்கன்ட் லெவ்ரினன்ற் நீல் வீரசிறி டயஸ், சி. ஏ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, நவம்பர் 23.

12-144

1970 இன் இல. 393

என். டிஎச்/விஎவ்/17/ஏ (VI)

### தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றமும் இளைப்பாறலும்

(அ) பதவி ஏற்றம்

1970 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் பிறெவே லெவ்ரினன்ற் கேணல் ஆகக் கடவர் :—

மேஜர் பலகென்னதி ஹேவகே தியடோர் சில்வா, சி சி. சி.

(ஆ) இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தரைப்படையின் இலங்கை தொண்டர் படையினின்றும் இளைப்பாறினுர் :—

பிறெவே லெவ்ரினன்ற் கேணல் பலகென்னதி ஹேவகே தியடோர் சில்வா, சி.சி.சி.

மேஜர் ஆதர் பியதாச ரணவீர, சி.சி.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, நவம்பர் 23.

12-146

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 த் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

1970 இன் இல. 394

எண். டிஎச்/விஎவ்/34/(பீ)

*தரைப்படை—சி.வி.எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றங்கள்*

1970, ஒற்ரோபர் 1 ஆம் திகதியிலிருந்து தற்காலிக கப்ரின்ஸ் ஆகக் கடவர் :—

லெவ்ரினன்ற் கோனுபினுவலகே சிறில் பிரேமசந்திர, சி.ஏ.பி.சி.

லெவ்ரினன்ற் கிரிபத்கொடகே குலரத்ன, சி.ஏ.பி.சி.

லெவ்ரினன்ற் ரூபசிங்ஹ தர்மரத்ன, சி.ஏ.பி.சி.

லெவ்ரினன்ற் ஷென்றி வீடர் புஞ்சிஹெட்டி, சி.ஏ.பி.சி.

லெவ்ரினன்ற் விதானகே சந்திரசோம பெரேரா, சி.ஏ.பி.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, நவெம்பர் 18.

12-3

---

1970 இன் இல. 395

எண். டிஎச்/விஎவ்/17/ஏ(VI)

*தரைப்படை—சி.வி.எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அரசாணை அமர்வுகளுக்கு நியமனங்களும் மாற்றுச்சேவை நியமனங்களும்*

*நியமனங்கள்*

அ. கீழ்க்குறிப்பிடப்பெற்ற கனவான்கள்

1967, நவெம்பர் 17 ஆம் திகதியிலிருந்து இலங்கை பயிலுநர் சிறப்பணியில் செக்கன்ட் லெவ்ரினன்ற்கள் ஆகக் கடவர் :—

திரு. விஜேரத்ன முதியன்சேலாகே டொன் ஜினதாச அன்ட்ருடி

திரு. கித்சிறி விஜயபா குமாரசிங்ஹ

செக்கன்ட் லெவ்ரினன்ற் விஜேரத்ன முதியன்சேலாகே டொன் ஜினதாச அன்ட்ருடி, சி. சி. சி. அவர்களது இச்சிறப்பணியிலான முதுமுறை ஒழுங்குநிலை, செக்கன்ட் லெவ்ரினன்ற் மண்டல வட்டகே சரணபால, சி.சி.சி. அவர்களுக்கு உடனடுத்துப் பின் வரும்.

செக்கன்ட் லெவ்ரினன்ற் கித்சிறி விஜயபா குமாரசிங்ஹ, சி. சி. சி. அவர்களது இச்சிறப்பணியிலான முதுமுறை ஒழுங்கு நிலை, செக்கன்ட் லெவ்ரினன்ற் அலெண்டர ஆச்சாரிகே காமினி பெரேரா விஜேரத்ன, சி.சி.சி. அவர்களுக்கு உடனடுத்துப் பின்னர் வரும்.

ஆ. கீழ்க்குறிப்பிடப்பெற்ற கனவான்கள்

1968, ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கைப் பயிலுநர் சிறப்பணியில் செக்கன்ட் லெவ்ரினன்ற் ஆகக் கடவர் :—

திரு. வீரசிங்ஹ முதியன்சேலாகே செனரத் திக்கிரிபண்டா வீரசிங்ஹ

இவ்வலுவலர், செக்கன்ட் லெவ்ரினன்ற் விஜயசிங்ஹ அபேக்கூன் நந்தசிறி விஜயசிங்ஹ, சி. சி. சி. அவர்களுக்கு உடனடுத்து முன் இச்சிறப்பணியில் முதுமுறை ஒழுங்கு நிலை பெறுவார்.

*மாற்றுச் சேவை நியமனங்கள்*

அ. இலங்கைப் பயிலுநர் சிறப்பணியைச் சேர்ந்த கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர்கள் 1967, நவெம்பர் 15 ஆம் திகதியிலிருந்து இச்சிறப்பணியின் கனிட்ட பிரிவில் மாற்றுச் சேவைக்கு நியமிக்கப்படுகின்றனர் :—

செக்கன்ட் லெவ்ரினன்ற் விஜேரத்ன முதியன்சேலாகே டொன் ஜினதாச அன்ட்ருடி, சி. சி. சி.

செக்கன்ட் லெவ்ரினன்ற் கித்சிறி விஜயபா குமாரசிங்ஹ, சி. சி. சி.

ஆ. இலங்கைப் பயிலுநர் சிறப்பணியைச் சேர்ந்த கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர் 1968, ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்து இச்சிறப்பணியின் கனிட்ட பிரிவில் மாற்றுச் சேவைக்கு நியமிக்கப்படுகிறார்.

செக்கன்ட் லெவ்ரினன்ற் வீரசிங்ஹ முதியன்சேலாகே செனரத் திக்கிரிபண்டா வீரசிங்ஹ, சி.சி.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, நவெம்பர் 23.

12-145

---

1970 இன் இல. 396

எண். டிஜி/42/ஆர்ஈசிரி.

*இலங்கை அரச கடற்படை—அலுவலர்களின் நியமனங்கள்*

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் இலங்கை அரச கடற்படையின் பின்வரும் நியமனத்தை அங்கீகரித்தலில் களிப்படைந்துள்ளார் :—

1970 ஆம் ஆண்டு நவெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து கடற்படைப் பொறுப்பு அலுவலர் (திருகோணமலை) ஆகக் கடவர்—லெவ்ரினன்ற் கொமாண்டர் ஏ. எச். ஏ. த சில்வா, இலங். அ. க.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, நவம்பர் 23.

12-147

---

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 378

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். பி. விஜசிங்க .. | அதிகப்படியான உத்தியோகத்தரும் இணை நீதவான் முதலியனவும், அவிசாவளை | 1970 நவம்பர் 14 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. பி. ஆர். சில்வா .. | இணைநீதவான் முதலியன, அவிசாவளை. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 நவம்பர் 29 லிருந்து.. | அவிசாவளை நீதிமன்ற 92810 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. டி. ஈ. தர்மசேகர .. | இணைமாவட்ட நீதிபதி முதலியன, காலி. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 நவம்பர் 26 லிருந்து .. | காலி மாவட்ட நீதிமன்ற 7543, எல் 6686 இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஈ. எஸ். குணரட்ண .. | இணை நீதவான் முதலியன, பலப்பிட்டி .. | 1970 நவம்பர் 22, 23, 25 .. லிருந்து 29 | திரு. எஸ். ஜோகரனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. எம். எம். விஜசூரிய .. | இணை நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970 நவம்பர் 23 லிருந்து | கொழும்பு தெற்கு நீதிமன்ற 17759/பி, 11659/பி இலக்க வழக்குகளில் தீர்ப்பளிப்பதற்கு |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ரி. குணரட்ண .. | இணை மாவட்ட நீதிபதி முதலியன, பாணந்துறை | 1970 நவம்பர் 17 விருந்து .. | திரு. சி. எல். ரி. மூனமலே இல்லாத காலங்கள் |
| திரு. பி. மகேஸ்வரன் .. | இணைமாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1970 நவம்பர் 22 விருந்து .. | திரு. ஜே. பி. சி. சுவரிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். குலதுங்க .. | இணைமாவட்ட நீதிபதி முதலியன, மாத்தறை | 1970 நவம்பர் 25 விருந்து டிசம்பர் 2 வரை | திரு. ஈ. ஏ. விஜகுலசூரிய இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஏ. குணரட்ண .. | இணை நீதவான் முதலியன, களுத்துறை .. | 1970 நவம்பர் 15 விருந்து 18 வரை | திரு. சி. மனேகரா இல்லாத காலங்கள் |
| திரு. எல். எஸ். வி. பெரேரா .. | இணை நீதவான் முதலியன, பதுளை .. | 1970 நவம்பர் 14 .. | திரு. எஸ். ஜே. டி. டீ. எஸ். விஜயரட்ண இல்லாத காலம் |
| திரு. எச். ஈ. விஜதுங்க .. | இணை நீதவன் முதலியன, கொழும்பு .. | 1970 நவம்பர் 27 விருந்து 30 வரை | திரு. என். பி. டி. எஸ், விஜசேகர இல்லாத காலங்கள் |
| திரு. வி. ஜே. சி. பெரேரா .. | குருணுகல் இணை நீதவான், குளியப்பிட்டி முதலிய இடங்கள் | 1970 நவம்பர் 20 விருந்து 22 வரை | திரு. டி. எஸ். டி. பி. ஆர். சேனுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஜே. பீரிஸ் .. | இணை நீதவான் முதலியன, பதுளை .. | 1970 நவம்பர் 24 விருந்து 28 வரை | திரு. எஸ். ஜே. டி. டீ எஸ். விஜயரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எம். முஸ்தாப .. | இணை நீதவான் முதலியன, கண்டி .. | 1970 டிசம்பர் 2 விருந்து 5 வரை | திரு. எவ். ஜி. பி. பொர்னுன்டோ இல்லாத காலங்கள் |
| திரு. எல். பி. கரளியத்த .. | பாததும்பர முதலியவற்றின் ஊர்நீதிமன்ற இணைத்தலைவர் | 1970 நவம்பர் 18 விருந்து .. | பதியப்பலள்ள ஊர்நீதிமன்ற 7630 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித்தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | வெளடவிலி அற்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 16 விருந்து 18 வரை | திரு. டி. பி. எல்லப்பொல இல்லாத காலங்கள் |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | நுவரகம் பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 30 .. | திரு. பி. எஸ். விக்ரமசிங்க இல்லாத காலம் |
| திரு. எச். எம். குணசேகர .. | மாகம்பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில்தலைவர் | 1970 ஒக்டோபர் 19 .. | திருமதி. பி. எஸ். ராமச்சந்திரன் இல்லாத காலம் |
| திரு. டி. வீரதுங்க .. | வெல்லபொடப்பத்து முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 18 விருந்து 21 வரை | திரு. பி. ஓ. ஆர். விஜதிலக்க இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எஸ். எம். தீரரட்ண .. | ஷை ஷை .. | 1970 ஒக்டோபர் 23, 24 .. | ஷை |
| திரு. பி. வி. சேனுதிருஜா .. | வவுனியா தெற்கு முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 19 விருந்து 21 வரை | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஏ. ஈ. பின்ரோ .. | பிற்றிகல் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 15 .. | திரு. பி. ஜே. எஸ். ஏ. பெரெர இல்லாத காலம் |
| ஷை | ஷை ஷை .. | 1970 நவம்பர் 16 .. | — |
| திரு. ஏ. எஸ். பி. ரணசிங்க .. | புத்தளம் பத்து முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 4 .. | திரு. பி. டி. பி. விஜசேகர இல்லாத காலம் |
| திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க .. | தும்பனே முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில்தலைவர் | 1970 ஒக்டோபர் 26 .. | திரு. ஏ. பி. அலுவிகார இல்லாத காலம் |
| திரு. பி. வி. சேனுதிருஜா .. | வவுனியா வடக்கு முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 30 விருந்து நவம்பர் 2 வரை | திரு. ஏ. எம். ஐ. சாகீட் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஏ. அரசக்கோன .. | ஏறுவில் பொரைதீவு முதலியவற்றின் ஊர் நீதிமன்ற பதில்தலைவர் | 1970 ஒக்டோபர் 21, 22 .. | திரு. சி. ஆர். ருஜசிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. எல். கே. செல்வனுயகம் .. | ஷை ஷை .. | 1970 நவம்பர் 7 .. | ஷை |
| திரு. எம். எச். காரியப்பர் .. | கரவக்குப்பத்து முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 30 .. | திரு. கே. நாகலிங்கம் இல்லாத காலம் |
| திரு. டி. ஜயசிங்க .. | கல்பொடகோறளை முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 ஒக்டோபர் 30, 31 .. | திரு. ஜே. டபிள்யு. பி. உடலகம இல்லாத காலங்கள் |
| திரு. என். சி. ருஜபக்ச .. | குளியப்பிட்டிக்காரியதிகாரப்பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 4, 5 .. | திரு. எஸ். கடவத்த ஆராச்சி இல்லாத காலங்கள் |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | நுவரகம்பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்ற இணைத்தலைவர் | 1970 ஒக்டோபர் 31 விருந்து.. | மிஹிந்தல ஊர்நீதிமன்ற 6017/ எம் இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. சி. இராசையா .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதிமன்ற இணைத்தலைவர் | 1970 நவம்பர் 18 விருந்து .. | சங்கானை ஊர்நீதிமன்ற 9468 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஏ. ஜே. சாகீட் .. | றைகம்கோறளை முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 9, 10 .. | திரு. என். வி. ரி. மெண்டிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. பி. றேன்ஜ் .. | ஏவகம்கோறளை முதலியவற்றின் ஊர்நீதி மன்ற இணைத்தலைவர் | 1970 டிசம்பர் 23 விருந்து .. | ஹொன்னந்தற ஊர்நீதிமன்ற 4086 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஏ. டபிள்யு. ஏ. எமானுஎல்.. | தேவமெதி அற்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப்பதில் தலைவர் | 1970 நவம்பர் 11, 12, 14 .. | திரு. சி. ஏ. எஸ். ஈ. கிறிஸ்பின் இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | வவுனியா வடக்கு முதலியவற்றின் ஊர்நீதி மன்றப்பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 10 .. | திரு. ஏ. எம். ஐ. சாகீட் இல்லாத காலம் |
| திரு. எச். டபிள்யு. டி. என். வெதசிங்க | கடவத்தக்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 நவம்பர் 15 விருந்து 17 வரை | திரு. டபிள்யு. குணவர்த்தன இல்லாத காலங்கள் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் தேதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஏ. டபிள்யு. ஏ. எமானுவல் | கல்கமுவ காரியாதிகாரப்பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில்தலைவர் | 1970 நவம்பர் 19, 20, 22 .. | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. கே. கணபதிப்பிள்ளை .. | தென்மராட்சி முதலியவற்றின் ஊர்நீதிமன்ற இணைத்தலைவர் | 1970 நவம்பர் 30 லிருந்து .. | சாவகச்சேரி ஊர்நீதிமன்ற 6637 இலக்கவழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| ஷை .. | ஷை .. | 1970 நவம்பர் 16 லிருந்து .. | சாவகச்சேரி ஊர்நீதிமன்ற 6568 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

நீதிசேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12, 1970 ம் ஆண்டு நவம்பர் மீ 26 ந் உ.

எல். சமரதுங்க,
பதில் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

12–142/1

---

இல : பிஎல்/பி10/63.

## நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீக்கப்பட்ட நியமனம்

1970 நவம்பர் 16, பிற்றிகல்கோறளைவடக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில்தலைவராக நியமனஞ்செய்யப்பட்ட திரு. டி. ஈ. எஸ். ரணசிங்க அவர்களின் நியமனம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12, 1970 ம் ஆண்டு நவம்பர் மீ 26 ந் உ.

எல். சமரதுங்க,
பதில் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

12–142/2

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 399

*பா 4/சாவி 2/355., பா 4/சாவி/நில. நில. 20.,*
*பா 4/சாவி/நில 16., பா 4/சாவி 2/409.,*
*பா 4/சாவி 9/207., பா 4/சாவி 15/79.,*
*பா 4/சாவி 33/18., பா 4/சாவி 38/123.*

*நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம்*

*82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர், ஜுசே மரியா ஜயமான்ன ஆகிய யான்—*

1. *வழக்கறிஞர் வால்ர ஜயவர்தன அவர்களை கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவானுகவும்,*
2. *காரியவசம் மாந்நகே தீபால் ஜயசூரிய அவர்களை உதவி அஞ்சல் அதிபதி (நிருவாகம்) பதவியை வகிக்கையில், கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*
3. *டபிள்யு. என். டி. எம். வில்பிரட் அவர்களை, கொழும்பு, மாவட்ட நீதிமன்ற சிரேட்ட மேலதிக செயலாளர் பதவியை வகிக்கையில், கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*
4. *பாலகே ருெபட்சிங்கோ குணசேகர அவர்களை பாணந்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*
5. *கிர்த்தி லெம்பட் வீரசேகர அவர்களை கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*
6. *சுரபியெல் கல்பட ஆராச்சி அவர்களை பலப்பிட்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*
7. *டொன் ஜினதாச குமாரசிங்க அவர்களை பொல்லநறுவை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*
8. *வேதசேன சமரசிங்க அவர்களை கேகாலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,*

*இத்தால் நியமிக்கின்றேன்.*

*ஜே. எம். ஜயமான்ன,*
*நீதியமைச்சர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 நவம்பர் 26.*
*12-143/1*

---

1970 இன் இல. 400

*(20 ஆம் அத்தியாயமான) குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 120 ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு நீதியமைச்சர் அவர்கள்—*

*பா 4/கமப 2/13.*

*திரு. முகமது லெப்பே அகமது றிபாய் அவர்களை 1970, நவம்பர் 3 ஆந் திகதி முதல் கொழும்பு மாநகர சபைப் பகுதிக்கான மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளார்.*

*நிகால் ஜெயவிக்கிரம,*
*நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர்.*

*நீதியமைச்சு,*
*கொழும்பு, 1970, நவம்பர் 26.*
*12-143/2*

---

1970 இன் இல. 401

*எமது இல.: ஈபி/ஏ. 3*

*பின்வரும் நியமனங்களைச் செய்வதில் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார் :—*

*கொழும்பு நிருவாக மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபர் திரு. டி. டபிள்யு. டீ அல்விஸ் அவர்கள் லீவில் இருக்கும்பொழுது, மேற்படி மாவட்டத்தின் பதில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எல். பி. விக்கிரமஆராய்ச்சி அவர்கள், மேற்படி மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராக கடமை ஆற்றும்பொழுது, தமது சொந்தக் கடமைகளுடன், கொழும்பு*

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த கொழும்பு நிருவாக மாவட்டத்திற்கு, பெற்ரோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை 27 ஆம் திகதி முதல் கடமை புரிய.

அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எஸ். டபிள்யூ. குணவர்தன அவர்கள் தமது சொந்தக் கடமைகளுடன், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்ரோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, ஆகஸ்ட் 17 ஆம் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எம். ரி. டபிள்யூ. அமரசேகர அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன் யாழ்ப்பாணம் திருவாக மாவட்டத்திற்கு, பெற்ரோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக, 1970, செத்தெம்பர் 16 ஆம் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

வவுனியா நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜயவீர அவர்கள், மன்னார் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றும்பொழுது, தமது சொந்தக் கடமைகளுடன் மன்னார் நிருவாக மாவட்டத்திற்கு, பெற்ரோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக 1970, ஆகஸ்ட் 21 ஆம் திகதியில் இருந்து 1970, ஆகஸ்ட் 31 ஆம் திகதிவரை கடமை புரிய.

பி. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்.

பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
நவெம்பர் 1, 1970.

12-11

---

1970 இன் இல. 403

இல. :ஈபி/ஏ. 2

1950, யூலை 14 ஆம் திகதிய 10,123 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட பொருள்கோடற் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 2) 10 ஆ என்னும் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் பின்வரும் நியமனங்களைச் செய்திருக்கிறார் என்பதைப் பொதுமக்களின் கவனத்திற்கு இதன்மூலம் அறியத்தரப்படுகின்றது.

கொழும்பு நிருவாக மாவட்டத்தின், பதில் அரசாங்க அதிபர் திரு. டி. டபிள்யூ. டீ. அல்விஸ் அவர்கள் லீவில் இருக்கும் பொழுது, மேற்படி மாவட்டத்தின் பதில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எல். பீ. விக்கிரம ஆராய்ச்சி அவர்கள், மேற்படி மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றும் பொழுது, தமது சொந்தக் கடமைகளுடன் மேல் மாகாணப் பிசுக்காலாக 1970, யூலை 27 ஆம் திகதி முதல் கடமை புரிய.

அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எஸ். டபிள்யூ. குணவர்த்தன அவர்கள், தமக்குரிய கடமைகளுடன், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் பிரதிப் பிசுக்காலாகவும், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் சுங்கச் சேகரிப்பாளராகவும், அம்பாந்தோட்டை பிரதித் துறைமுகத் தலைவராகவும், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் பாழ்பொருள் ஏற்கும் உத்தியோகத்தராகவும் 1970, ஆகஸ்ட் 17 ஆம் திகதிமுதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எம். ரி. டபிள்யூ. அமரசேகர அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன் வடமாகாணப் பிசுக்காலாகவும், யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் சுங்கச்சேகரிப்பாளராகவும், யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் பாழ்பொருள் ஏற்கும் உத்தியோகத்தராகவும், யாழ்ப்பாணத்தின் வெளித் துறைமுகங்களான பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன் துறை ஆகிய ஒவ்வொன்றினதும் பிரதித் துறைமுகத் தலைவராகவும் 1970, செப்தெம்பர் 16 ஆம் திகதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

வவுனியா நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜயவீர அவர்கள், மன்னார் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராக கடமை ஆற்றும் பொழுது, தமது சொந்தக் கடமைகளுடன், மன்னார் நிருவாக மாவட்டத்தின் சுங்கச் சேகரிப்பாளராகவும், மன்னாரின் வெளித் துறைமுகங்களான பேசாலை, தலைமன்னார் ஆகிய ஒவ்வொன்றினதும் பிரதித் துறைமுகத் தலைவராகவும், மன்னார் நிருவாக மாவட்டத்தின் பாழ்பொருள் ஏற்கும் உத்தியோகத்தராகவும் 1970, ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் 1970, ஆகஸ்ட் 31 ஆம் திகதிவரை கடமை புரிய.

மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் பணிப்பின்கீழ் கடமைபுரிய மேற்படி மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எம். தியோபிலஸ் அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன் மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் பிரதிப் பிசுக்காலாகவும், மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தின் உதவிச் சுங்கச் சேகரிப்பாளராகவும், மட்டக்களப்பு உதவிச் சிறைக்கூடக் கண்காணிப்பாளராகவும் 1970, செத்தெம்பர் 23 ஆம் திகதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

டபிள்யூ. ஆர். பீ. திலகரத்ன,
நிரந்தரச் செயலாளருக்காக.

பொது நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, நவெம்பர் 1, 1970.

12-10

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

### 25 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி சைமன் குணவர்த்தன ஆகிய நான், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவல்களின் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் உத்தேச வாங்குதலை இக்கட்டளை மூலம் அனுமதிக்கிறேன்.

லெஸ்லி. குணவர்த்தன,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆடு நவெம்பர் மீ 22 ந உ.

அட்டவணை

மத்திய மாகாணம், நுவரேலியா மாவட்டம், வலப்பனை டி. ஆர். ஓ. பகுதி, பத்தகொல்லை கிராம சேவகர் பிரிவிலுள்ள ஓயா பலாத்தை கிராமச்சபை எல்லைக்குட்பட்ட வத்துமுல்லை எனும் கிராமத்தில் அமைந்துள்ள இட்டத்தட்ட ஏ. 4, று. 0, பே. 0 விஸ்தீரணமுள்ள மூன்று காணித்துண்டுகள்.

**காணித்துண்டு " ஏ "**

எல்லைகள் :

வடக்கும், மேற்கும் : வாய்க்கால் (" எல ") ;

கிழக்கு : வத்துமுல்லையைச் சேர்ந்த எல். பீ. எச். விஜேகோனும், ஜே. எம். டி. ஜயசூரியாவும் மறுபேரும் (வாங்கவிருக்கும் " சி " காணித்துண்டு) பயிந்தகுளமவைச் சேர்ந்த பீ. தலுகமவும் (வாங்கவிருக்கும் " பி " காணித்துண்டு) உரிமைகோரும் சொத்துக்கள் ;

தெற்கு : கண்டி-ருகலை பி. டபிள்யூ. டி. வீதியும் வத்துமுல்லை-பத்தகொல்லை வீதியும்.

**காணித்துண்டு " பி "**

எல்லைகள் ;

வடக்கு : ஜே. எம். டி. ஜயசூரியாவும் மறுபேரும் உரிமைகோரும் சொத்து (வாங்கவிருக்கும் " சி " காணித்துண்டு).

கிழக்கு : வத்துமுல்லையைச் சேர்ந்த திருமதி. எம். யாப்பா உரிமை கோரும் சொத்து ;

தெற்கு : வத்துமுல்லை-பத்தகொல்லை வீதி ;

மேற்கு : கொழும்பு 7, கிறிகரி வீதி 24 ஆம் இலக்கத்தில் வசிக்கும் சேர். எட்வேட் ஜயதிலக்கா உரிமை கோரும் சொத்து (வாங்கவிருக்கும் " ஏ " காணித்துண்டு).

**காணித்துண்டு " சி "**

எல்லைகள் :

வடக்கு : வத்துமுல்லையைச் சேர்ந்த எல். பீ. எச். விஜேகோன் உரிமைகோரும் சொத்து ;

கிழக்கு : வத்துமுல்லையைச் சேர்ந்த திருமதி எம். யாப்பா உரிமை கோரும் சொத்து ;

தெற்கு : பயிந்தகுளமவைச் சேர்ந்த பீ. தலுகமை உரிமைகோரும் சொத்து (வாங்கவிருக்கும் " பி " காணித்துண்டு) ;

மேற்கு : கொழும்பு 7, இறிகரி வீதி 24 ஆம் இல்லத்தில் வசிக்கும் சேர் எட்வேட் ஜயத்திலக்கா உரிமைகோரும் சொத்து (வாங்க விருக்கும் " எ " காணித்துண்டு).

2. வாங்கவிருக்கும் காணித்துண்டுகளின் விவரங்கள் பின்வருமாறு :

**காணித்துண்டு " ஏ "**

காணிப் பெயர் : முல்கல்கெலே தேயிலைத் தோட்டம் (பகுதி).
விவரணம் : தேயிலைத் தோட்டம்.
விஸ்தீரணம் : கிட்டத்தட்ட ஏ. 3, றூ. 0, பே. 0.
உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : சேர் எட்வேட் ஜயத்திலக்க, 24, இறிகரி வீதி, கொழும்பு 7.

**காணித்துண்டு " பி "**

காணிப் பெயர் : கெற்றிபில்லகற்றியா அல்லது நாவத்தேவத்தை.
விவரணம் : வீடு ஒன்றுடன் காணி.
விஸ்தீரணம் : கிட்டத்தட்ட ஏ. 0, றூ. 1, பே. 0.
உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : பீ. தலுகம வலகம்பாவ, பயிந்தகுளம.

**காணித்துண்டு " சி "**

காணிப் பெயர் : கல்லெனகாவகேனே.
விவரணம் : நிலையான பயிர்ச் செய்கை இல்லை.
விஸ்தீரணம் : கிட்டத்தட்ட ஏ. 0, றூ. 3, பே. 0.
உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : வத்துமுல்லையைச் சேர்ந்த ஜே. எம். டி. ஜயசூரியாவும் மறுபேரும்.

12–66

---

## 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

### 25 (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி சைமன் குணவர்த்தன ஆகிய நான், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அலுவல்களின் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை யில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தின் உத்தேச வாங்குதலை இக்கட்டளை மூலம் அனுமதிக்கிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மீ 23 ந உ.

லெஸ்லி குணவர்த்தன,
போக்குவரத்து அமைச்சர்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சியன கோறளை (மேற்கு) டி. ஆர். ஓ. பகுதி, தலுகமைப் பட்டணச் சபை எல்லைக்குட்பட்ட வருகனத்தை கிராம சேவகர் பிரிவிலுள்ள வருகனத்தை எனும் கிராமத்தில் அமைந்துள்ள கிட்டத்தட்ட 6 ஏ., 0. றூ, 0 பே. விஸ்தீரண முள்ள ஓர் காணித்துண்டு.

2. **எல்லைகள் :**

வடக்கு : எஸ். டி. அகிடா சமரத்துங்க, ஏ. டி. பேர்ணர்ட் ஆகியோர் உரிமைகோரும் சொத்தும் பழைய கண்டி வீதியும் :

கிழக்கு : குழி (" மோட எல ") ;

தெற்கு : கிறிஸ்தியான் பெரேராவும் எம். பி. கொஸ்தாவும் உரிமை கோரும் சொத்து ;

மேற்கு : எல். பீ. பெரேரா உரிமைகோரும் சொத்து.

3. வாங்கவேண்டிய காணித்துண்டின் விவரங்கள் பின்வருமாறு :—

காணிப்பெயர் : மூனமல்ககாவத்தை (அம்பலான்வத்தை).
விவரணம் : இரண்டு வீடுகளுடன் தென்னங்காணி.
விஸ்தீரணம் : கிட்டத்தட்ட ஏ. 6, றூ. 0, பே. 0.
உரிமை கோருபவரின் பெயரும் விலாசமும் : எஸ். ஏ. பெரேரா, இல. 10, வேவல்துவ, களனி.

12–89

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள சுசந்த மஹேஸ் முணசிங்க அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத் துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப் பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவ கார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

12-37

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2)ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(1), 3(8), 4(1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயகா ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ் 1970 யூலை 20 ஆந் தேதிய 14,915/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித் தற்கான அட்டவணையில் 3 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட வேகே கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின் றேன் :

1. கிறிந்திவெலை, மெத்தேகமையைச் சேர்ந்த கெட்டியாராச் சிகே வெல்லம்புர டொன் ஸ்ரிவன் ஜயசுந்தர அவர்கள்.
2. பபிலியவலை, பள்ளேகமையைச் சேர்ந்த கொலிபிட்டியே விஜேரத்ன பண்டார அவர்கள்.
3. பெபிலியவலை, தன்கல்லையைச் சேர்ந்த தெபெகம கங் கானமலாகே ஏமிஸ்சிங்கோ அவர்கள்.
4. பெபிலியவலை, கனிகிகமையைச் சேர்ந்த லமாபுர தேவகே சிறிசேன அவர்கள்.
5. சிறிநிதிவெலை, கிஸ்செல்லையைச் சேர்ந்த கிரகலை தேவகே ஜேம்ஸ் அவர்கள்.
6. பெபிலியவலை, வெரலுகம்பலையைச் சேர்ந்த பின்னவல அப்புகாமில்லாகே டொன் எப்பிரகாம் அப்புகாமி அவர் கள்.
7. பெபிலியவலை, கனிகிகமையைச் சேர்ந்த வலிமுனி தேவகே சய்மன் பிரேமரத்ன அவர்கள்.
8. பெபிலியவலை, வேகெரவைச் சேர்ந்த காளஞ்சி தேவக கருணாரத்ன அவர்கள்.
9. பெபிலியவலை, வேரலுகம்பலையைச் சேர்ந்த பின்னவலை அப்புகாமிலாகே சாபின் அப்பிகாமி அவர்கள்.
10. ரதாவன, மெத்கேனே, "அமரவாச" ஐச் சேர்ந்த மத்துமா அமரசேகர ஆராச்சிகே சய்மன் அமரசேகர அவர்கள்.
11. பெபிலியவலை, தன்கல்லையைச் சேர்ந்த பதிரன்நெகெலாகே டேவிட் சிங்கோ, பதிரன்நெகெ அவர்கள்.
12. கிறிந்திவெலை, பெத்தேகமையைச் சேர்ந்த தர்மதாச மனம்பேரி அவர்கள்.
13. கிறிந்திவெலை, மெத்தேகமையைச் சேர்ந்த சம்பந்த பெரும முகமது அப்புகாமிலாகே டொன் டேவிட் அவர்கள்.
14. கிறிந்திவெலை, மய்லவலானையைச் சேர்ந்த புத்பிட்டி லேகம்லாகே நெல்சன் விஜேசுந்தர அவர்கள்.
15. கிறிந்திவெலை, மய்லவலானையைச் சேர்ந்த மான்கொட்ட கங்கானமலாகே பீற்றர் றூபசிங்க அவர்கள்.
16. கிறிந்திவெல, தியவாலை, பொல்கேனையைச் சேர்ந்த விக்ரம சிங்க ஆரச்சிகே டொன் குலசேன விக்ரமசிங்க அவர்கள்.
17. பெபிலியவலை, பள்ளேகமையைச் சேர்ந்த இலன்ககோன் தசநாயகே நோம்ஸ் தசநாயக அவர்கள்.
18. கிறிந்திவெலை, குட்டிவிலையைச் சேர்ந்த கொரதல் பேடிகே சலொன்சியா அவர்கள்.
19. பெபிலியவலை, பள்ளேகமையைச் சேர்ந்த கனேகொடகே எநோரிஸ் பியதாச அவர்கள்.
20. பெபிலியவலை, வல்பொலையைச் சேர்ந்த உடகந்தகே ஆராச்சிகே அவர்கள்.
21. பெபிலியவலை, வேரகெரவைச் சேர்ந்த வனிகரத்ன முதி யன்சேலாகே மெண்டிஸ் அவர்கள்.
22. கிறிந்திவெலை, மெத்தேகமையைச் சேர்ந்த அலகியவன்னே மொகொட்டி அப்புகாமிலாகே டொன் டேவிட் அவர்கள்.
23. கிறிந்திவெலை, உடகமையைச் சேர்ந்த ஜயசிரி திலகரத்ன அவர்கள்.

24. கிறிந்திவெலே, கோககவத்தையைச் சேர்ந்த முதுகலே முதலிகே பிரேமதிலக ஜயவர்தன அவர்கள்.
25. கிறிந்திவெலே, மில்லனேயைச் சேர்ந்த எதிரிசிங்க ஆராச்சிகே ஆரியதிலக அவர்கள்.
26. கிறிந்திவெலே, நிம்பிரிகமை, குறுநவத்தையைச் சேர்ந்த வலிமுனேனே அப்புகாமில்லாகே எவிதியெஸ் அவர்கள்.
27. வதுறுகமை, கன்னிமகரவைச் சேர்ந்த தொலேகத்தகே திலகசிறி அவர்கள்.
28. வதுறுகமை, இந்துறுகல்லேயைச் சேர்ந்த ஜயகொடி ஆராச்சிகே நவரத்ன அவர்கள்.
29. ரதாவானேயைச் சேர்ந்த டொன் சேகர பதிறென்னெகெலாகே ஜயசேன கறுணுசேகர அவர்கள்.
30. மண்டாவலே, அநுராகொடை, கொரகொல்லேயைச் சேர்ந்த அத்தநகொட கங்கானமலாகே தோமிஸ் அத்தநகொடை அவர்கள்.

(ஆ) கிறிந்திவெலே, மெத்தேகமையைச் சேர்ந்த கெட்டியாராச்சிகே வெல்லம்புர டொன் ஸ்ரிவன் ஜயசுந்தர அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

(ஈ) 1968.8.29 ஆம் தேதிய 14,817 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் இப்பகுதிக்கென நியமிக்கப்பட்ட இணக்குவோர் குழாம், இக்கட்டளை கசெற்றில் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகிவிடும்.

ஆர். விக்கிரமநாயகா,
நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண் நவம்பர் மீ 22 ந் வ.

12–100

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் பின்வரும் நியமனங்களை மகிழ்ச்சியுடன் செய்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 28 ம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(1) தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச் சபையில் வேலைக் கமர்த்துபவர்களின் பிரதிநிதியாக இருந்த திரு. பீ. வருசவிதான என்பவருக்குப் பதிலாக திரு. எக்ஸ். ஜொபின் என்பவர்.

(2) தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச் சபையில் வேலைக் கமர்த்துபவர்களின் பிரதிநிதியாக இருந்த திரு. எச். எம். ஏ. பீ. பர்ணுந்தோ என்பவருக்குப் பதிலாக திரு. டி. ஈ. ஹெட்டியாராச்சி என்பவர்.

ஏ. ஈ. கோகர்ளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ந் தேதி.

12-138

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

#### அறிவித்தல்

1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 8 ந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு, தீப்பெட்டி உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் உறுப்பினராயிருத்தற்கு (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி, பின்வரும் பேர்வழிகளை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஏ. ஈ. கோகர்ளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ந் தேதி.

#### நியமன உறுப்பினர்கள்

1. திரு. டி. டப்ள்யூ. விஜேசூரிய
2. திரு. திலகரத்ன லியனகே
3. திரு. ஹேரத் ஜயகொடி

#### வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதிகள்

1. திரு. எல். ஈ. வீரசேகர
2. திரு. எல். கே. ஹேவாவிதாரண
3. திரு. ஈ. எஸ். அப்பாத்துரை
4. திரு. எச். பீ. பெரேரா
5. திரு. ஏ. எச். சி. அபேவர்தன
6. திரு. சேனுதி எஸ். சில்வா
7. திரு. ரி. சிவப்பிரகாசம்
8. திரு. ஏ. எச். எம். ரசீன்

#### தொழிலாளர்களின் பிரதிநிதிகள்

1. திரு. உவால்ற்றர் ஜோதிபால
2. திரு. கே. டி. ஜினதாச
3. திரு. உவால்ற்றர் ஜயசிங்க
4. திரு. ரி. டபிள்யூ. மெரில் பர்ணுந்தோ
5. திரு. எச். பி. எஸ். பர்ணுந்தோ
6. திரு. ஆனந்த தசநாயக
7. திரு. எஸ். செல்லையா
8. திரு. ஈ. ஏ. ஜே. அமரசேகர

12-137

---

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி, தேயிலை ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்த திரு. ஜீ. ஜீ. மேனுர்ட் என்பவர் நிரந்தரமாகத் தீவை விட்டகன்றமையால், அவருக்குப் பதிலாக அச் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருத்தற்கு திரு. எஸ். ஈ. சதரசிங்க என்பவரை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஏ. ஈ. கோகர்ளி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ந் தேதி.

12-136

---

### இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

#### பாராளுமன்றப் பொதுத் தேர்தல்—1970

#### 90 ம் இலக்க மட்டக்களப்பு தேர்தற்றொகுதி அங்கத்தவரின் தெரிவு

மேற்படி தேர்தல் அபேட்சகரான திருமேனிப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் அவர்களின் தேர்தற் செலவினங்கள் பற்றிய அறிக்கையும் அவ்வறிக்கையின் பொருட்டான உறுதியுரைகளும் 1970.8.15 ம் நாள் எனக்கு கிடைத்தனவென்றும் அவ்வறிக்கையையும் உறுதியுரைகளையும், இந்த அறிவித்தல் அரசாங்க கெசற்றில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், கந்தோர் வேளையில் எச்சமயத்திலேனும், மட்டக்களப்பு தேர்தற் கந்தோரில் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்திப் பரிசோதிக்கலாம் என்றும் 1946 ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 77 (1) ம் பிரிவின் கீழ், இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ந. பத்மநாதன்,
உதவி தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்,
தேர்தல் மாவட்டம் இல. 90—மட்டக்களப்பு.

தேர்தல் கந்தோர்,
கச்சேரி, மட்டக்களப்பு,
1970.11.20.

12-9

**இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை, 1946**

**பாராளுமன்றப் பொதுத் தேர்தல்—1970**

*82 ம் இலக்க பருத்தித்துறை தேர்தற்றொகுதி அங்கத்தவரின் தெரிவு*

*மேற்படி தேர்தல் அபேட்சகரான பொ. அ. விசாகரத்தினம் அவர்களின் தேர்தற் செலவினங்கள் பற்றிய அறிக்கையும் அவ்வறிக்கையின் பொருட்டான உறுதியுரைகளும் 1970, ஜூலை 6 ம் நாள் எனக்குக் கிடைத்தனவென்றும் அவ்வறிக்கையையும் உறுதியுரைகளையும், இந்த அறிவித்தல் அரசாங்க கெசற்றில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், கந்தோர் வேளையில் எச்சமயத்திலேனும், யாழ்ப்பாணம் தேர்தற் கந்தோரில் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்திப் பரிசோதிக்கலாமென்றும் 1946 ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 71 (1) ம் பிரிவின்கீழ், இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.*

*செ. நடராசா,*
*உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்*
*தேர்தல் மாவட்டம் இல. 82—பருத்தித்துறை.*

*தேர்தற் கந்தோர்,*
*யாழ்ப்பாணம்,*
*1970, நவம்பர் மாதம் 20 ந் திகதி*

*12-8*

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## விவாகங்கள் நிறைவேற்றிவைக்கும் பொருட்டுப் பதியப்பட்ட வணக்கத்தலத்தை ரத்துச் செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம் (112 ம் அத்தியாயம்) 12 ம் பிரிவின் கீழ், இலங்கை அரசாங்கத்தின் பதிவு காரியகர்த்தர் சாஹுல்ஹமீது முகம்மது சுபைர் பரூக் ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தைக் கொண்டு, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தேவாலயம் கிறீஸ்தவர்களினால் வணங்கும் பொது இடமாகக் கருதப்படாமையால் இத்தேவாலயத்தில் விவாகங்கள் பதிவு செய்யும் பொருட்டு அளிக்கப்பட்ட அனுமதியை, இத்தால் ரத்துச் செய்யவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

இலக்கம் : 785.

பதிவு செய்யப்பட்ட தினம் : 1955 பங்குனி 9.

விபரம் : பிபிலிகல் இலவச தேவாலயம்.

இருக்கும் இடம் : 59/2, சீபல் அவென்யு, கிரிலபனே.

குரு, அல்லது உரிமையாளர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் : ஈசெண்ட் கிளயார்நத்தானியல்.

எந்தச் சமயத்தின் சார்பாக இத்தேவாலயக் கட்டிடம் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது : இலங்கையின் இலவச தேவாலயங்கள்.

எஸ். எச். எம். இசட். பாரூக்,
பதிவு காரியகர்த்தர்.

பதிவு காரியகர்த்தர் அலுவலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆம் நவம்பர் மீ 19 ந் உ.

12-65

---

### *பிரகடனம்*

*உன்மத்த ரோக அபாயம்*

*உன்மத்த ரோக கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 476) பிரிவு ii இன் பிரகாரம் வட மாகாணத்தின் மன்னார் மாவட்ட பெரும்பாக இறைவரி அலுவலாளரின் பகுதிக்குட்பட்ட இடங்களாகிய, மன்னார் கிழக்கு, மாந்தை மேற்கு, தலைமன்னார், பேசாலை ஆகிய கிராமச்சபை எல்லைக்குள் உன்மத்த ரோக அபாயம் இருக்கிறதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. மேற்காட்டிய கிராமச் சபை எல்லைக்குள் தனிப்பட்டோரது சொந்த வளவிலோ, தோட்டத்திலோ, கட்டடத்திலோ தவிர்ந்த பகிரங்க இடங்களிலோ, வீதிகளிலோ கட்டப்படாமல் அல்லது விடுபட்டிருக்கும் எந்தவொரு நாயும் உடனடியாக அழிக்கப்படத்தக்கதாகும்.*

*1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம், 1971 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி வரை இப்பிரகடனம் செயற்படும்.*

*ச. கதிர்காமநாதன்,*
*அரசாங்க அதிபர்,*
*மன்னார் மாவட்டம்.*

*கச்சேரி, மன்னார்,*
*1970, நவம்பர் 25 ஆம் திகதி.*

*12-204*

---

### விசர் கடி நாய்கள்

*கண்டி மாவட்டத்தில் விசர் கடி நாய்களின் நோய் தென்படுவதினால், விசர் கடி நாய் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (ஜீ) உப பிரிவின் கீழ் நாய்களுக்கு தடை ஊசி மருந்து ஏற்றி அதற்குரிய அத்தாட்சிப் பத்திரத்தை மிருக வைத்தியரிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு நாய்களின் சொந்தக்காரர் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. அப்படிச் செய்து கொள்ள தவறுவோர் குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குள்ளாவார்.*

*1970 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் தடை ஊசி மருந்து ஏற்றிக் கொள்ளப்பட வேண்டும்.*

*எஸ். மாரலந்த,*
*அரசாங்க அதிபர், கண்டி.*

*கச்சேரி, கண்டி,*
*1970 ஆம் ஆண்டு நவெம்பர் மீ 24 ஆம் உ.*

*12-61*

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

### 1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக வரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின்கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறுன் " கையொப்ப மிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13 சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழே குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரகராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை— 1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நவெம்பர் | .. | 5.11.70 | வியாழன் | .. | 30.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| டிசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 18.12.70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 24.12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ.

எல் டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.